வடிகால் திட்டங்கள்.

*288 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவொற்றியூர் நகரத்தில் அடிநில வடிகால் திட்டப்பணி எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திருவொற்றியூர் வடிகால் திட்டம் 1978—79-ம் ஆண்டில் முடிவுறும் என்று கூறப்படுகிறது.

*289 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வினா எண். 219-க்கு, 30—1—1974 அன்று அளித்த விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் செயற் குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆய்வு வேலைகள் முடிவடைந்து தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. இருப்பினும் குடிநீர் வசதிக்கு முன்னுரிமை வழங்க வேண்டியுள்ளதால் இத்திட்டம் இவ்வைந்தாண்டு திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று உறுதி சொல்ல இயலாது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதை எந்தக் காலத்திலாவது எடுத்துக் கொள்வதற்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர்களே, எந்தக் காலத்திலே என்று என்னால் சொல்ல முடியாவிட்டாலும் அது யோசனையில் இருக்கிறது என்று சொல்லமுடியும். ஏனென்றால், பல்வேறு பகுதிகளிலே பாதாள சாக்கடைத் திட்டங்கள் வலியுறுத்தப்படுகின்றன. நகர்ப்புறத்திலே அது தேவையாகத்தானிருக்கிறது. இந்தப் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு முதலீடு செய்கிறபொழுது அதைத் திருப்பிக் கொடுக்கிற